// ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2115/51 - 2019 මාර්තු මස 23 වැනි සෙනසුරාදා - 2019.03.23
2115/51 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: MLB/LND/LNDAQ/L1/44-2.
காணி அமைச்சின் இல.: 4-3/9/2016/WS/518.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின், மாலிம்படை பிரதேச செயலகப் பிரிவின் மாலிம்படை கிராமத்தில் அமைந்துள்ளதும் முற்பிரதிப்பட இல. மாற/ 2761 படத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள கீழ் குறித்த காணி மாத்தறை iv ஆம் கட்ட நீர் வடிகாலமைப்பு திட்டத்தின் கீழ் ஊற்றுக் கிணறு மற்றும் பம்பு மணை அமைப்பதற்கு எடுத்துக்கொள்ள உத்தேசித்துள்ளது :

*01.* **துண்டு இல. 01**
காணியின் பெயர் : ஹெட்டிகேவத்த; விபரம் : அடர்ந்த காடு; ஆரம்ப உரிமை கோருவோர் : கே. கே. நிலன்த லக்மால், கிதலகம கிழக்கு iii, திஹகொட; விஸ்தீரணம்: 0.0846 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மாலிம்படை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தீபிகா கே. குணரத்ன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
மாலிம்படை.

பிரதேச செயலகம்,
மாலிம்படை,
2019, மாச்சு 21.

4 - 199

1A - G 29715 - 17 (2019/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.